# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **36**

| | |
|---|---|
| Name: ராஜு | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

A4, A7, A9, A10, A15 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of

**08.02.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனியில் குடியிருக்கிறேன். சம்பவத்தின்போது தென்காசியில் திருநெல்வேலி மேற்கு மாவட்ட இந்துமுன்னனி அமைப்பில் மாவட்ட அமைப்பாளராக இருந்தேன். எங்கள் அலுவலகம் தென்காசி, குலசேகரநாதர் கோவில் அருகில் அமைந்துள்ளது. அந்த இடம் வாய்க்கால் பாலம் அருகில் உள்ளது. அந்த அலுவலகம் அமைந்த கட்டிடம் யாருக்கு சொந்தமானது என்று தற்போது ஞாபகம் இல்லை. தென்காசி நகர் தலைவர் சக்தி பாண்டியன் என்பவர் அந்த கட்டிடத்தை வாடகைக்கு பிடிக்க ஏற்பாடு செய்திருந்தார். முன்னதாக குமார் பாண்டியன் என்பவர் தென்காசி நகர் இந்து முன்னனி தலைவராக இருந்தார். குமார் பாண்டியன் படுகொலை

செய்யப்பட்டார். அதன் பின்னர் தான் சக்திபாண்டியன் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். சக்தி பாண்டியன் தலைவராக இருந்தபோது தென்காசியில் நடைபெற்ற மோதல் பற்றி கேள்விப்பட்டேன். அந்த சம்பவத்தில் சுமாராக 6 நபர்கள் இறந்தார்கள். எங்கள் அலுவலகத்தினை காவல் துணை கண்காணிப்பாளர் 6 பேர் கொலைசம்பவத்திற்கு 6 நாட்களுக்குபின்னர் காலை 11,00 மணிக்கு மேல் எங்கள் அலுவலகத்தினை சோதனை இட்டார். அப்போது நானும் இருந்தேன். சக்திபாண்டியனின் சகோதரர் ரவி என்பவரும் இருந்தார். வருவாய் துறையில் இருந்து சில அதிகாரிகள் வந்தார்கள். அங்கு போலீசார் எதையும் கைப்பற்றவில்லை. அவ்வாறு சோதனை செய்ததற்கு எங்களிடம் அத்தாட்சியாக கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னை மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**